# வட மாகாண அரச சேவை உத்தியோகத்தர்களுக்கான அறிவித்தல்.

1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் பகுதி IV பிரகாரம் அமைக்கப்பட்ட மாகாண பொதுச்சேவைகள் ஆணைக்குழுவுக்கு மாகாணத்தின் கௌரவ ஆளுநரால் கையளிக்கப்பட்ட நியமனம், இடமாற்றம், ஒழுக்காற்று நடவடிக்கைகள் மற்றும் பதவி நீக்கம் ஆகிய நடவடிக்கைகள் தொடர்பான அதிகாரங்கள், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் பிரதம செயலாளர், அமைச்சு செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களுக்கு அதிகாரக் கையளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

அதிகாரம் கையளிப்பு செய்யப்பட்டுள்ள அதிகாரியினால் தமக்கு கையளிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் நியமனம் அதாவது தகுதிகாண் காலம் முடிவடையும் போது சேவையில் உறுதிப்படுத்தல், வருடாந்த சம்பள ஏற்றத்தை உழைத்துப் பெறுதல், வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில், திணைக்களப் பரீட்சையில் சித்தியடைதல் போன்ற சேவை நிபந்தனைகளை பூர்த்தி செய்தவர்களுக்கு வருடாந்த வேதன ஏற்றம் வழங்கப்படாமை, சேவையில் உறுதிப்படுத்தப்படாமை மற்றும் பதவியுயர்வு வழங்கப்படாமை போன்றவையும் கௌரவ ஆளுநரினால் அங்கீகரிக்கப்பட்ட மாகாண இடமாற்ற கொள்கைக்கு ஏற்ப இடமாற்றம் பெற்றவர்கள் அதனால் தாம் பாதிக்கப்பட்டவர்களாக கருதுபவர்கள், மாகாண உத்தியோகத்தர்களுக்கெதிரான ஒழுக்காற்று நடவடிக்கைகளின் போது முறைசார் ஒழுக்காற்று விசாரணையில் தண்டனை விதிக்கப்படுவதற்கு முன்பு செய்யப்பட்ட தண்டனை இடமாற்றம், வருடாந்த வேதன ஏற்றம் வழங்காமை போன்ற செயல்களினால் பாதிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் அவ்வாறான பாதிப்புக்கு எதிராக மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு ஒன்றை செய்ய முடியும்.

அவ்வாறு மேன்முறையீடு செய்பவர்கள் தாங்கள் கடமையாற்றும் திணைக்களத் தலைவருடாக பாதிப்பிற்கான உத்தரவு கிடைத்து ஆறு (06) மாதங்களிற்குள் அத்தகைய கட்டளைக்கு எதிராக மேன்முறையீடு செய்யலாம்.

தற்போது சேவையில் இல்லாத ஒருவர் தனது மேன்முறையீட்டை தான் இறுதியாக கடமையாற்றிய திணைக்களத்திற்கு பிரதியுடன் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவிற்கு நேரடியாக சமர்ப்பிக்க முடியும்.

மேன்முறையீடுகளின் பிரதிகளை கையளிப்பதற்கும் முறைப்பாட்டாளருக்கு ஆலோசனை வழங்குவதற்கும் வட மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் மாவட்ட ரீதியாக உள்ள உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகங்களில் இதற்கென அமைக்கப்பட்டுள்ள கருமபீடங்களிலும் மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு அலுவலகத்திலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மேன்முறையீடுகளை சமர்ப்பிக்க விரும்பும் அலுவலர்களுக்கான மாவட்ட ரீதியான சேவை, 2022 ஜனவரி மாதத்தில் பின்வரும் அட்டவணைக்கமைய, நடைபெறும்.

| திகதி | நேரம் | இடம் |
|---|---|---|
| 05.01.2022 | 10.00 – 2.00 | பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு |
| 10.01.2022 | 10.00 – 2.00 | மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு அலுவலகம் , வடமாகாணம். |
| 12.01.2022 | 10.00 – 2.00 | பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், வவுனியா |
| 19.01.2022 | 10.00 – 2.00 | பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், மன்னார் |
| 26.01.2022 | 10.00 – 2.00 | பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி |

*சி.திருவாகரன்,*
செயலாளர்,
மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு,
வட மாகாணம்.

சி.திருவாகரன்
செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடமாகாணம்